REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

அந்த இரகசியம்!

★

கேரளத்தில் கம்யூனிஸ்டுகள் வெற்றிபெற்ற இரகசியம் என்ன? முன்னாள் உ. பி. கவர்னர் கே. எம். முன்ஷி கூறுவதைக் கேளுங்கள் :—

"கேரள கம்யூனிஸ்டுகள் தேர்தலில் வெற்றி பெற்றதற்குக் காரணம், அவர்கள் கம்யூனிஸ்டுகள் என்பதல்ல; அவர்கள் கேரளத்தைப்பற்றிக் கவலைப்பட்டார்கள்; 'மத்திய சர்க்கார் கேரள மாநிலத்தைப் பட்டினி போடுகிறது' என்று குற்றம் சாட்டினர்கள்; இதனால்தான் அவர்கள் வெற்றி பெற்றார்கள்" என்று முன்ஷி, சூரத் நகரக் கூட்டம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

மலர் 5] சென்னை: புரட்டாசி 14உ திங்கள் (30—9—57) ★ ☆ வெளியூர்: புரட்டாசி 15உ செவ்வாய் (1—10—57) [இதழ் 92

இந்தித் திணிப்பைத் தீவிரப்படுத்தாதது ஏன்?

மாநிலங்களுக்கு டில்லியின் தாக்கீது?

மானியத் தொகையை அதிகரிக்கவும் தயாராம்

குடியரசுத் தலைவரோ உறுதிமொழிகளை வரையாது வழங்குகிறார்!

இந்தித் திணிப்புக்கு எதிராக உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் குரல் தருகின்றனர்

புதுடில்லி, செப். 30 —

இந்தித் திணிப்பு! தமிழகத்தில்—தென்னகத்தில் கிளம்பியிருக்கும் எதிர்ப்புப் புயலை அறிந்த பின்னரும் டில்லிப் பெரியவர்கள், தங்களின் கைவரிசையைக் காட்டத் துணிந்துள்ளனர்.

தாக்கீது கிளம்பியிருக்கிறதாம் டில்லிப் பட்டணத்திலிருந்து! 'இந்தித் திணிப்பை ஏன் தீவிரப்படுத்தவில்லை?' என்று, இந்தி வழங்காத மாநிலங்கள்மீது கணை தொடுக்கப்பட்டிருக்கிறதாம்!

'இந்தி வழங்காத மாநிலங்களில், இந்தி மொழியைப் பரப்பும் முயற்சிகள் திருப்திகரமாக இல்லை' என, டில்லி சர்க்காரின் கல்வி இலாகா வருந்துகிறதாம்!

இந்திப் பிரச்சாரத்திற்கும், வளர்ச்சிக்கும், மத்திய சர்க்கார் தரும் மானியத் தொகைகளை, இந்தி வழங்காத மாநிலங்கள் முழுவதுமாக உபயோகித்துக்கொள்ளவில்லையாம்!

இதுபற்றி மத்திய கல்வி இலாகா, இந்தி வழங்காத மாநிலங்களுக்கு, இந்தியைப் பரப்புவதில் தீவிரமாக ஈடுபட வேண்டுமென யோசனைகூறி கடிதம் எழுதியிருக்கிறதாம்!

அண்மையில் நடைபெற்ற கல்வி மந்திரிகள் மாநாட்டில், இந்தி வழங்காத மாநிலங்களைச் சேர்ந்த மந்திரிகள், இந்தியைப் பரப்புவதில் உள்ள கஷ்டங்களை எடுத்துரைத்தனராம்.

'இந்தியைத் திணிக்கிறார்கள் என்ற சந்தேகம் ஏற்படாதவகையில், இந்தித் திணிப்பைச் சாவதானமாகச் செய்யவேண்டியிருக்கிறது' எனவும் அவர்கள் எடுத்துரைத்தனராம்.

என்றாலும் இப்போது, டில்லியிலிருந்து தாக்கீது கிளம்பியுள்ளதாம்!

மாநில சர்க்கார்கள் விரும்பினால்—ஒதுக்கப்படுகிற தொகைகளை முழுவதுமாகச் செலவிடத் தயாரானால், டில்லி சர்க்கார், இப்போது ஒதுக்கியுள்ள மானியத் தொகையை அதிகரித்துத் தரவும் தயாராக இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறதாம்!

★

உறுதிமொழிகள்!

வரையாது வழங்குகிறார் குடியரசுத் தலைவர்

பூனாவில், 'மராட்டிய ராஷ்டிர பாஷா சபா'வின் புதிய கட்டிடம் ஒன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத், வழக்கம் போல, 'இந்தித் திணிப்பு வட்டார மொழிகளைப் பாதிக்காது' என்றும், 'இந்தி வட்டாரமொழிகளின் இடத்தைப் பிடிக்க விரும்பவில்லை' என்றும், உறுதிமொழிகளை, வரையாது வழங்கியிருக்கிறார்.

'இதர வட்டார மொழிகளை அழுத்திவிட்டு, இந்தியை வளப்படுத்த வேண்டும் என்று நாங்கள் எண்ணவில்லை' என்று அவர் குறிப்பிட்டாராம்!

இதர மொழிகளின் வளர்ச்சி, இந்தியின் வளர்ச்சிக்கு உதவும் என்றே தான் கருதுவதாகவும் கூறினாராம்!

★

இந்தியைத் திணிக்காதீர்!

உயர் நீதிமன்ற வழக்கறிஞர் குரல்

சென்னை, செப். 28—

'இந்தியைத் திணிக்காதீர்' என்று, சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் சங்கம் குரல் எழுப்பியுள்ளது.

மொழிக் கமிஷன் அறிக்கை குறித்து சங்கம், தனது நேற்றைய கூட்டத்தில் கவலை தெரிவித்தது.

"இந்தியை, இன்றைய கட்டத்தில் திணிப்பதானது, நாட்டின் 'ஒற்றுமை'க்கு ஊறுதேடும்" என்று கருத்தறிவித்த சங்கம், 'இப்போதுள்ள நிலையே—அதாவது, ஆங்கிலமே ஆட்சிமொழி என்ற நிலையே நீடிக்கவேண்டும்' என்றும், 'இந்தி பேசாத மக்களின் உணர்ச்சிகளை அவமதிக்க வேண்டாம்' என்றும் குடியரசுத் தலைவருக்கும், மக்கள்சபைக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றது.

அத்துடன், 'அரசியல் சட்டத்தின் எட்டாவது ஷெட்யூலில், 15-வது மொழியாக ஆங்கிலத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்' என்றும் மக்கள்சபையை சங்கம் வேண்டிக்கொண்டுள்ளது.

'அரக்கான்' தனி மாநிலமாக வேண்டும்

பர்மாவில் கிளர்ச்சி

ரங்கூன், செப். 30—

'அரக்கானை தனி மாநிலமாக்க வேண்டும்' என்று கோரி 500 அரக்கான் புத்த வழிபாட்டினர், பர்மா பாராளுமன்றத்தின் முன் ஊர்வலம் நடத்தி ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர் என்று செய்தி வெளியாகியுள்ளது.

வட மாநிலத்திற்கு டில்லியின் கருணை!

புதுடில்லி, செப். 28—

வடமாநிலமான இராசஸ்தானிலிருந்து உடைப்பு பருப்பு உள்பட்ட பருப்பு வகைகள் ஏற்றுமதிக்கு அரசாங்கம் விதித்திருந்த தடையை ரத்து செய்துள்ளது.

டெல்லி பெரியவர்களின் மனப்போக்கு என்ன?

தென்னாட்டு மாநிலங்கள் தாராளமாக நிதி உதவி கோரவேண்டும்

நியாயத்திற்கும், அடக்கத்திற்கும் பலன் கிடைக்கவில்லையே!

சென்னை சர்க்கார் டில்லியைத் தட்டிக் கேட்கவேண்டும்

டாக்டர் இராமசாமி முதலியார் கருத்துரை

சென்னை மாநில மந்திரிகளின் தொடைநடுங்கித்தனத்திற்கு—மத்திய சர்க்காரைத் தட்டிக்கேட்கும் நெஞ்சுர மற்ற கோழைத்தனத்திற்கு டாக்டர் ஏ. இராமசாமி(முதலியார்) 'நற்சான்று' வழங்கியிருக்கிறார்.

சென்னை நகரசபை ஸ்டேடியத்தில், சென்னை நகரசபைத் துவக்க நாள் விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், டாக்டர் ஏ. இராமசாமி முதலியார் குறிப்பிட்டதாவது :—

சென்னை சர்க்கார் ஒரு சமயம் ரூ. 25 இலட்சம் வேண்டுமென டெல்லி சர்க்காரைக் கேட்டது; ஆனால் டெல்லி கொடுத்தது ரூ. 5 இலட்சம்தான். ஆனால் வேறு சில மாநிலங்கள் கோடிக்கணக்கில் கேட்டுப் பெறுகின்றன.

"ஒரு சமயம் சென்னை சர்க்காருக்கு மத்திய சர்க்கார், அனுமதித்தது ரூ. 60 இலட்சம்; சென்னை செலவிட்டதோ ரூ. 59 இலட்சத்துச் சொச்சம்; ஆனால், வேறு ஒரு மாநிலம், அனுமதிக்கப்பட்டிருந்த ரூ. 30 இலட்சத்திற்குப் பதிலாக ரூ. 50 இலட்சம் செலவழித்துவிட்டு, உபரியாகச் செலவிட்ட ரூ. 20 இலட்சத்தை மீண்டும் டில்லியிடம் கேட்டுப் பெற்றுள்ளது.

"வேறு மாநிலங்கள், ஓயாமல் பற்றுக்குறை வரவு-செலவுத் திட்டங்களைப் போட்டுக் கொண்டு, டில்லியிடம் நிதி உதவி பெற்றுக் கொள்ளுகின்றன.

அழுதபிள்ளைதானே பால் குடிக்கும்? இந்தச் சுதந்தர நாட்டில் நியாயமாகவும், அடக்கமாகவும் நடந்துகொண்டால் பயன் கிடைப்பதில்லை. எனவே, தென்னாட்டு மாநிலங்கள் தாராளமாக நிதிஉதவ வேண்டுமென டில்லி சர்க்காரைத் தைரியமாகக் கேட்க வேண்டும்.

"டில்லி சர்க்கார், தங்கள் வருமானத்தைப் பங்கிட்டுக் கொடுக்கும் விதத்தை நான் அறிவேன்.

"மக்கள் சபையில் கேட்கப்படும் கேள்விகளையும், அவற்றிற்குத் தரப்படும் பதில்களையும் கூர்ந்து கவனித்துப்பாருங்கள். அவை, பெரிய மனிதர்கள் மனப்போக்கும் சிந்தனையும் எப்படிப்பட்டவை என்பதை அவ்வப்போது காட்டுவனவாயிருக்கின்றன.

"நான் ஒன்றும் குறுகிய மனம் படைத்தவனல்ல; ஆனால், இந்தியாவின் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் நியாயம் வழங்கப்பட வேண்டும் என்றுதான் கேட்கிறேன்."

1957 மார்ச் 31-ந் தேதியன்று இந்தியாவில் மொத்தம் சுமார் 6,500 இரயில்வே நிலையங்கள் இருந்தன.

தமிழக—ஆந்திர எல்லைத் தகராறு

படாஸ்கர் தீர்ப்பை ஏற்க இரு மாநில சர்க்காரும் முடிவு

தமிழகத்திலிருந்து 300 சதுர மைல் ஆந்திர மாநிலத்திற்குச் செல்கிறது

பிரதேச மக்களின் கருத்து மதிக்கப்படவில்லை

ஐதராபாத். செப். 28—

நான்கு ஆண்டுகளாக இழுபறியாக இருந்துவந்த ஆந்திர-தமிழக எல்லைப் பிரச்சினைக்கு, படாஸ்கர் அறிக்கையின் அடிப்படையில் முடிவு காணப்பட்டிருக்கிறது.

ஆந்திர முதன் மந்திரி சஞ்சீவ ரெட்டியும், தமிழக முதன்மந்திரி காமராசரும், முன்னவரின் இல்லத்தில் இன்று சந்தித்து, நான்கு மணி நேரத்திற்கும் அதிகமாக விவாதித்துவிட்டு, படாஸ்கரின் தீர்ப்பை அப்படியே ஏற்றுக் கொள்ளுவதென முடிவு செய்திருக்கின்றனர்.

காமராசருடன் மந்திரிகள் சுப்பிரமணியம், பக்தவத்சலம் ஆகியோரும், சஞ்சீவரெட்டியுடன் மந்திரி காளா வெங்கட்ராவும் விவாதத்தில் கலந்து கொண்டிருக்கின்றனர்.

படாஸ்கர் அறிக்கையில்

படாஸ்கர் அறிக்கைப்படி சுமார் 310 சதுர மைல் பரப்புள்ள பிரதேசம், பொன்னேரி திருவள்ளூர் தாலுகாக்களிலிருந்து ஆரணியாறு திட்டம் உட்பட தமிழ்நாட்டிலிருந்து ஆந்திரத்திற்குத் தரப்பட வேண்டும் என்றும், ஏறத்தாழ அதே அளவு பிரதேசம்—திருத்தணி நகரம் உட்பட தமிழ்நாட்டுடன் சேர்க்கப்பட வேண்டும் என்றும் முடிவாகியிருக்கிறது.

அத்துடன், தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரி தாலுகாவிலிருந்து மூன்று கிராமங்களை ஆந்திரத்திற்குத் தரப்பட வேண்டும் என்று படாஸ்கர் ஒரு துணை அறிக்கை மூலம் கூறியுள்ள தீர்ப்பும், இரு மாநிலத்தவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டது.

எதிர்ப்புகள் மதிக்கப்படவில்லை

"திருவள்ளூர், பொன்னேரி தாலுகாக்களிலிருந்து ஒரு பெரும் பகுதியை ஆந்திரத்துடன் இணைப்பது கூடாது' என்று அந்த வட்டார மக்கள், சட்டசபை உறுப்பினர்கள் எல்லாம் எதிர்ப்புத் தெரிவித்தனர்; ஆனால் அவை பலன் பெறவில்லை—மதிக்கப்படவில்லை.

குறிப்பாக பழவேற்காடு வட்டார மக்கள், அங்குள்ள இளைஞர் முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் திரண்டு, தங்கள் வட்டாரத்தில் வாழும் பல்லாயிரம் தமிழர்கள், படாஸ்கர் தீர்ப்பு மூலம் ஆந்திராவுடன் இணைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்; ஆயிரக்கணக்கான மக்கள் கையொப்பமிட்ட மகஜர்கள் மாநில முதன் மந்திரி காமராசருக்கும், டெல்லி சர்க்காருக்கும் இளைஞர் முற்போக்குக் கழகத்தவரால் அனுப்பிவைக்கப்பட்டன உத்தேசத் தீர்ப்புக்கு எதிராக ஆகஸ்டு இறுதியில் கண்டனக் கூட்டங்கள் நடத்தினர்.

என்றாலும் இதுபோன்ற பிரதேச மக்களின் கருத்துக்கள் மதிக்கப்படாமலேயே முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

‘விலைவாசிக் கட்டுப்பாடுகள் தவிர்க்க முடியாதவை’

‘இன்ரே-பிறகோ பொருள்களுக்கு விலைக் கட்டுப்பாடு வந்தே தீரும்’

டில்லிப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் கருத்து

ஐதராபாத், செப். 27—

“திட்டமிட்ட பொருளாதார அமைப்பு கொண்ட ஒரு நாட்டில், விலைவாசிகளுக்குக் கட்டுப்பாடு விதிப்பது என்பது தவிர்க்க முடியாததாகும்; எனவே சர்க்கார், இப்பொழுதோ பின்னரோ, ‘கண்ட்ரோல்’ கோண்டுவரவேண்டிய அவசியம் ஏற்படத்தான் செய்யும்,”

—என்று, டில்லிப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் குறிப்பிட்டிருக்கிறார்.

‘திட்டத்தைக் காப்பாற்றுங்கள்’ என்ற தலைப்பில், பொதுக் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், திட்டத்தின் பிரதான அம்சங்கள் உத்தேச காலத்திற்குள்ளாகவே நிறைவேற்றப்பட முடியும் என்றும், மக்களின் ஒத்துழைப்பைப் பெற சர்க்கார் முயற்சிக்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.

இந்தியப் பொருளாதாரக் கழகக் கூட்டம் ஒன்றில் பேசிய அவர், ‘அன்னியச செலாவணி நிலையைச் சம நிலைப்படுத்த ரூபாயின் மதிப்பைக் குறைப்பது பயன் தராது; திட்டமிட்ட பொருளாதார அமைப்புக்கொண்ட நாட்டில், ரூபாயின்மதிப்பைக் குறைக்க வேண்டுமென்ற யோசனை புத்திசாலித்தனமானது அல்ல’ என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

“ரூபாயின் மதிப்பைக் குறைப்பதற்கு இரண்டு பலன்களை காரணமாகக் காட்டுகிறார்கள்; அதாவது, இறக்குமதியைக் குறைப்பது, ஏற்றுமதியை அதிகப்படுத்துவது என்பதுதான் அது; ஆனால் இந்தியா, வெளிப்படையாகவே துணிந்துதான், திட்டத்திற்குத் தேவையான பொருள்களை இறக்குமதி செய்துகொண்டிருக்கிறது. விரும்பினால், ரூபாயின் மதிப்பைக் குறைக்காமலேயே இறக்குமதியை நிறுத்திக் கொள்ளலாம்” என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அமெரிக்காவில் அறியாமைத் தீ!

அல்பேனி, செப். 28—

அமெரிக்காவில், நிறவெறியாட்டம் ஒரு அவமானச் சின்னமாக விளங்கி வருகிறது.

வெள்ளையர் படிக்கும் கல்லூரிகளில் நீக்ரோக்கள் படிப்பதற்கு மறுக்கக்கூடாது என்று அமெரிக்க அரசாங்கம் வற்புறுத்துகிறது; ஆனால் இந்த முற்போக்கு ஏற்பாட்டிற்கு வெள்ளையர் எதிர்ப்புத் தெரிவித்து பலாத்காரச் செயல்களிலும், நாசவேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அல்பேனியில் உள்ள ஒரு நீக்ரோ கல்லூரிக்கு நேற்றிரவு தீ வைக்கப்பட்டுள்ளது; இதனால் சுமார் 3,00,000 டாலர் மதிப்புக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது என்று போலீசார் தெரிவித்துள்ளனர்.

‘தோளோடு தோள் நின்று போரிடுவோம்’

சவூதி மன்னரின் உறுதி!

டமாஸ்கஸ், செப். 28—

“போர்நிலை உருவாகி சிரியாவோ, மற்ற அரபு நாடுகளோ ஆக்கிரமிப்புக்கு ஆளானால் சவூதி அரேபியா அரபு நாடுகளுடன் இணைந்து தோளோடு தோள் நின்று போராடும்” என்று, சவூதி அரேபிய மன்னர் தெரிவித்துள்ளார்.

கடல் கடந்த தமிழர்களின் பரிதாபம்

மலேயாவில்வேலையில்லா திண்டாட்டம்

கோலாலம்பூர், செப். 27—

அடுத்த சில மாதங்களில் குறைந்தது 30,000 தமிழர்கள், மலேயாவில் வேலை இழக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளதாகத் தெரிய வருகிறது.

மலேயா சுதந்தரம் பெற்றதைத் தொடர்ந்து இதுவரை வெள்ளையர் வசம் இருந்த இரப்பர் தோட்டம் சீனர்கள் வசம் மாற்றப்படுகிறது. இரப்பர் தோட்டங்களை சீனர்கள் வசப்படுத்தியதும், அந்தத் தோட்டங்களில் பணியாற்றிவரும் தமிழர்கள் வேலையிலிருந்து நீக்கப்படக்கூடுமாம்.

சொந்த நாட்டில் வாழ வழியின்றி கடல் கடந்த தமிழர்களுக்கு இந்த அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இதைக் குறித்து அவர்கள் இந்திய நல நிறுவனத்தில் முறையிட்டுள்ளனராம்.

வெள்ளையர்கள் அவர்களுடன் செய்துகொண்டுள்ள உடன்படிக்கையில், ‘இரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களை நீக்கக்கூடாது’ என்று குறிப்பிட்டுள்ளனராம்.

அல்ஜீரிய விடுதலை பற்றி பிரான்சு திட்டம்

ஐ. நா.-வை ஏமாற்றும் சூழ்ச்சி

பிரெஞ்சு ஆதிக்கத்திலிருந்து அல்ஜீரியா சுதந்திரம் பெற வேண்டும் என்று மக்கள் நடத்தி வரும் கிளர்ச்சிக்குத் தலைமை வகித்துவரும் டாக்டர் எம். லாமினே அவரது தோழர் செரீப் குலாவுடன், இந்திய மக்களின் நல்லுறவைத் தேடி ஆதரவு திரட்ட இந்தியா வந்துள்ளனர்.

‘அல்ஜீரியாவில் உள்ள ஐரோப்பியர்களுக்கும், முஸ்லீம்களுக்குப் ஒரே அடிப்படையில் சனநாயக பிரதிநிதித்துவம் அளிக்க சமீபத்தில் பிரான்ஸ் திட்டம் வெளியிட்டிருந்ததைப் பற்றி ‘ஐ. நா. சபையில் அல்ஜீரியாவைப் பற்றிய உண்மை நிலையை மறைப்பதற்காகச் செய்யப்படும் ஒரு சூழ்ச்சி’ என்று டாக்டர் லாமினே வருணித்தார்.

ஐ. நா. பேரவை அல்ஜீரியா பற்றி இன்னும் மூன்று வாரங்களில் விவாதிக்க உள்ளது.

நகரசபைக்குத் திடீர் அக்கறை

சுகாதார அதிகாரி அறிக்கை

சென்னை, செப். 28—

சென்னை பொது சுகாதாரச் சட்டத்தில் 76 (பி) பிரிவும், 2 (டி) துணைப் பகுதியும் இருப்பதை மக்கள் கவனத்திற்கு சென்னை நகரசபை கொண்டுவர வேண்டிய காலங்கடந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

நகரில் காலரா நோய் அதிகமாகப் பரவி வந்துள்ளது தெரிந்த ஒன்றாகும். இப்போது 1 முதல் 25-வது வட்டங்கள்வரை எங்கும் உணவுப் பண்டங்களில் தூசிபடியாமலும், ஈக்கள் மொய்க்காதவாறும் பாதுகாத்துப் பண்டங்களை விற்பனை செய்யவேண்டும் என்று நகரசபையின் சுகாதார அதிகாரி அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளார்.

கா சீ.கா.-வின் புதிய பெயர்!

‘இந்திய தேசிய சனநாயகக் காங்கிரஸ்’

மதுரை, செப். 28—

இதுவரையில், காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி என்ற பெயரில் இயங்கிவரும் கா. சீ. க.-விற்கு ‘இந்திய தேசிய சனநாயகக் காங்கிரஸ்’ என்ற புதிய பெயரிடப் பட்டுள்ளது. இதற்கென்று ஒரு தனிக்கொடியும் இருக்கவேண்டும் என்று மதுரையில் நடைபெற்ற கா. சீ. கா. விஜயாலோசனைக் குழு முடிவு செய்துள்ளது.

பண்டிதரின் பழைய பல்லவி!

பாங்கி ஊழியர் வேலை நிறுத்தம் சரியல்லவாம்!

மைதான், செப். 28—

பாங்கி ஊழியர்களின் வேலை நிறுத்தம் சட்டவிரோதமானதாம்! சரியானதல்லவாம்! இதனால், பொதுமக்களுக்குப் பல இடையூறுகள் ஏற்படுகின்றனவாம்!

பண்டித நேரு மைதான் அணையைத் திறந்துவைத்துப் பேசுகையில் இவ்வாறு கூறியுள்ளார்.

பாங்கி ஊழியர்கள் தங்கள் குறைகளை பாங்கி அதிபர்களிடமே தீர்த்துக்கொள்ள வேண்டுமாம்;

எங்கும் அபிவிருத்தி வேலைகள் தடைபடக்கூடாது என்பதே அவருடைய கவலையாம்!

‘பாங்கி ஊழியர்களின் கோரிக்கைகளைப்பற்றி எதும்கூற விரும்பவில்லை’ என்று அவர் குறிப்பிட்டிருப்பதிலிருந்து, பாங்கி ஊழியர்களின் கோரிக்கைகள் மறுக்க முடியாத நியாயம் நிரம்பியவை என்பது தெளிவாகிறது.

உப்பு நீரிலிருந்து குடிதண்ணீர்!

உப்பு நீரிலிருந்து குடிதண்ணீர் தயாரிக்கும் இயந்திரச் சாதனமொன்று பிரிட்டிஷ் நிறுவனமொன்றினால் தயாரிக்கப்பட்டிருக்கிறது. நாளொன்றுக்கு 2,200 காலன்கள் தண்ணீரை அளிக்கக்கூடிய இந்தச் சாதனம் சிக்கனமாகவும் இயங்குகிறதென்றும், ஆயிரம் காலன்கள் தண்ணீர் தயாரிப்புக்கு சுமார் ஐந்து ஷில்லிங்குகளே செலவாகிறதென்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

மத்திய அரசுகவனிக்குமா?

சென்னை, செப். 27—

1957—58-ல், ஆரம்பப் பாடசாலைகள் கட்டுவதற்காக மனைகளை வாங்க ரூ. 2,39,000 இந்திய அரசாங்கத்திடம் கடன் உதவி கேட்பதென்று சென்னை நகரசபை முடிவு செய்துள்ளது.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 30—9—57 திங்

ஜனநாயகம் நிலவ!

ஸ்தல நிர்வாகத்திற்குப் பஞ்சாயத்துக்கள் திறமை மிகுந்த கருவிகளாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி, அதற்காகப் பஞ்சாயத்துக்களின் பொறுப்புகளை விரிவாக்கி அதற்கேற்ற வகையில், அவற்றிற்கு நிதிவசதிகளையும் பெருக்கித்தர வேண்டுமென டில்லி சுகாதார மந்திரி கார்மார்கர், காஷ்மீரில் துவங்கிய மாநில ஸ்தல சுயஆட்சி மத்தியக் குழுக் கூட்டத்தில் கருத்தறிவித்திருக்கிறார்.

உண்மையானதோர் ஜனநாயக சமூக அமைப்பை இலட்சியமாகக் கொண்டவர்களுக்கு, இந்தக் கருத்து விருப்பமுடன் சிந்திப்பதற்குரியதாகப் படும் என்பதில் ஐயமில்லை.

கிராமப் பஞ்சாயத்துக்கள், நகரசபைகள், மாவட்டக் கழகங்கள், மாநில சட்டமன்றங்கள், மக்கள் சபை இவை எல்லாம், ஒரு மக்கள் கூட்டத்தின் சகலதுறைத் தேவைகளையும், அவர்கள் விருப்பப்படி, ஜனநாயகபூர்வமாக நிறைவேற்றித் தருவதற்கான நவீன காலக் கருவிகளாகும்.

தேவைகளை உள்ளூர், வட்டார, மாவட்ட, பிரதேச, மாநில, தேசியத் தேவைகள் எனப் பகுத்து, அந்தந்த வகையான தேவைகளை, அவற்றிற்கென்றிருக்கும் கருவிகள் நிறைவேற்றித் தரவேண்டும்; அப்படி நிறைவேற்றுவதற்குரிய அதிகாரங்களும், நிதிவசதிகளும், சம்பந்தப்பட்ட கருவிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு கருவியும், தனக்கென நிர்ணயிக்கப்பட்டுள்ள எல்லைக்கு அப்பால் வழிவிலகிச் செல்லாமல் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும், ஒவ்வொரு கருவியும், ஒன்றுக்கொன்று அனுவசியமான தலையீடின்றி இயங்குவதற்கும் சுதந்தரம் பெற்றிருக்க வேண்டும்.

அப்போதுதான், குறிப்பிட்ட மக்கள் கூட்டம் ஒரு உண்மையான ஜனநாயக சமூக அமைப்பைப் பெற்றிருக்கமுடியும் என்று, உலகில் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

ஒரு ஜனநாயக சமூக அமைப்பின் உள்ளடக்கமே பொதுவாக மக்களை ஆள்வதற்கான அதிகாரங்கள் மக்களிடமிருந்து வெகுதூரம் விலகிச் சென்று ஓரிடத்தில் குவிந்துவிடாமல் முடிந்தவரையில் குறுகிய எல்லைக்குள் வரம்பு கட்டப்பட்டு, அவை மூலம் மக்களே நேரடியாக தங்களை ஆண்டுகொள்வதுதான் என்பதையும் உலகெங்கிலுமுள்ள ஜனநாயகவாதிகள் சண்டையிட்டுக் கொள்ளாமல் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

மத்திய மந்திரி கார்மார்கர், பஞ்சாயத்துக்களின் அதிகாரங்களையும் பொறுப்புகளையும் விரிவாக்க வேண்டுமெனக் கருத்தறிவித்த நேரத்தில், மேற்சொன்ன அடிப்படையிலிருந்து இந்தப் பிரச்சினையை நோக்கியிருக்கிறார் என்று கூறுவதற்கு இல்லை.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், மந்திரி தெரிவித்துள்ள கருத்து, மத்திய சர்க்காரின் கடந்த பத்தாண்
கால நடைமுறைக்கு முற்றி
விரோதமானதாகக்கூட அ
திருக்கிறது.

இப்போதுள்ள அரசி
அமைப்பின்படி, இந்தியா
ஜனநாயக உறுப்புகள்தான்
காங்கே அமைந்திருக்
றனவே தவிர, உண்மை
மக்கள் ஆளப்படுவது டி
யிலிருந்துதான் என்ப
மட்டமான பிற்போக்குவாதி
கூட ஒப்புவர். மாநிலக் கட்
தில் உள்ள ஜனநாயக உறுப்
விளங்கும் சட்ட மன்றம்
அந்த மாநிலத்தைப் பொறு
அத்தனை தேவைகளையும் பூ
செய்யக்கூடியதாக இ
அதற்கான அதிகாரங்க
பெற்றிருக்கவில்லை. மே
மேலும், ‘அகில இந்திய’
மாக்கும் வேலை தொட
நடைபெறுகிறது; சகல
காரங்களும் நாளுக்கு
டில்லியில் கொண்டுவந்து
கப்படுகின்றன.

இந்தப் பிரத்தியட்ச நி
யும் மனதில் கொண்டு
பஞ்சாயத்துக்கள் போ
ஸ்தல ஸ்தாபனங்க
பொறுப்புகளையும் அதி
களையும் விரிவாக்குகிற
கினைப் பரிசீலித்தாக
டும். அப்போதுதான்,
அமைப்பினை ஜனநாயகப்
தும் வேலையை முறை
திசையில் செய்யமுடியும்.

கிராமப் பஞ்சாயத்து
போன்ற ஸ்தல ஸ்தா
களின் பொறுப்புகளும்
காரங்களும் அதிகரி
படுவதின் மூலம்
தான ஒரு அந்தஸ்தைப்
வேண்டுமென விரும்பும்
இலட்சியமாகக் கொள்ள
கிற சமூக அமைப்பு,
அடிப்படை முதலியன
வாக்கப்பட்டிருக்க வேண்
ஏனெனில், அந்தத்
இருந்தால்தான், அந்த அ
புக்கான பல்வேறு உறுப்
யும், அவற்றிற்கிடையே
தொடர்புகளையும் வரை
துக் கொண்டு படிப்பு
அந்த அமைப்பினை உ
கிச் செம்மைப்படுத்து
இயலும். இலட்சியத்தி
தெளிவில்லாவிட்டால்...

தங்களின் நடைமுறை
ஜனநாயக விரோத
என்று ஆக்கிக்கொண்டி
டில்லிப் பெரியவர்கள்,
பஞ்சாயத்துக்களின் பொ
களை விரிவாக்கும் விவ
சமூக அமைப்பை ஜன
படுத்தும் பிரச்சினை
தொடர்பே இல்லாதது
சித்தரித்து, அதுபற்றி
தறிவித்திருப்பது வே
யாக இருக்கிறது.

ரூலும், கிராமப் பஞ்
துக்கள் போன்ற
ஸ்தாபனங்களின் பொ
களும் அதிகாரங்களும்
வாக்கப்பட வேண்டும்
கருத்து, நாளுக்கு நாள்
பெற்று வருவதை
டில்லி சர்க்கார் மந்திரி
திற்கு ஆதரவு தெரிவி
பது மகிழ்வதற்குரியதே.

இந்தக் கருத்தினை
விரிவாக பிறிதோர்
ஆராய்வோம்.

தமிழரின் ஒற்றுமையைத் துண்டிக்க, துளைக்க..!

கூர் முனைக் கத்திபோல் 'திட்டம்' உருவாகியுள்ளது

அரசியல் சட்டத்தை எழுதியவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களல்லவே

எவரெவரோ இயற்றிய தீர்மானம் எங்களைக் கட்டுப்படுத்தாது

பழைய மிரட்டல்கள் பகற்கனவாகவே முடியும்

திருவண்ணாமலை இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அண்ணா இறுதி எச்சரிக்கை

21—9—57-ல் நடைபெற்ற வ. ஆ. மாவட்ட இந்தி எதிர்ப்பு மாநாட்டில், அண்ணா அவர்கள் ஆற்றிய உரையின் இறுதிப் பகுதி இங்கு தரப்படுகிறது :—

"பேரீச்சம்பழக் கடைக்காரனிடம் சென்று, 'பேரீச்சம்பழம் உடலுக்கு நல்லதா?' என்று கேட்டால், என்ன பதில் சொல்லுவான்? 'ஆப்பிள் பழத்திற்கு இல்லாத சில தனித் தன்மைகள் இதற்கு உண்டு; மலைவாழைப் பழம் 10 சாப்பிடுவதும் சரி, 1 துண்டு பேரீச்சம்பழம் சாப்பிடுவதும் சரி' என்று, தன்னுடைய சரக்கு விற்பனையாவதற்காகப் பேரீச்சம்பழக் கடைக்காரன் அவ்வாறெல்லாம் சொல்லுவான். அதைப்போல, 'இந்தி நன்மையானதா—கேடு பயப்பதா? அல்லது இந்தி வேண்டுமா—வேண்டாமா?' என்பதை, இந்தி பேசுபவர்களைக் கேட்டுப் பயன் என்ன?

"நான் நாட்டை ஆளுகின்ற காங்கிரஸ் சர்க்காரைக் கேட்கிறேன்—'உங்களுக்கு உண்மையிலேயே ஆற்றலிருந்தால்—நம்பிக்கையிருந்தால் — தைரியம் இருந்தால், இந்தி வேண்டுமா—வேண்டாமா என்பதை, இந்தி பேசாத மக்களிடத்திலே ஓட்டெடுத்துக் காட்டுங்கள்; வங்காளத்திலே ஓட்டெடுங்கள் — மராட்டி நாட்டிலே ஓட்டெடுங்கள்—தமிழகத்திலே ஓட்டெடுங்கள் — கேரளத்திலேயும் வாக்கெடுங்கள் — ஆந்திரத்திலேயும் வாக்கெடுங்கள்!

"இந்தியைப் புகுத்த வேண்டுமென்பதற்கான திட்டம் தீட்டிய நேரத்தில் — எந்த நேரத்திலே தீட்டினார்கள் என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்த்தால், தெரியும் —வெள்ளைக்காரன், இந்தியச் சுதந்தரத்தைக் காங்கிரஸ்காரர்களிடத்திலே கொடுத்துவிட்டு, 'நீங்கள் எக்கேடோ கெட்டுப்போங்கள்; நான் கப்பலேறிச் சீமைக்குச் செல்லுகின்றேன்' என்று சென்றுவிட்ட நேரத்தில் —இவர்கள் உட்கார்ந்து ஒரு அரசியல் நிர்ணய சபையை ஏற்படுத்தினார்கள்.

"இங்கே நாம் ஒரு மாநாட்டுக்காகக் கூடியிருக்கின்றோம்; நம்மிலே 10 பேர் இங்கே உட்கார்ந்து, திருவண்ணாமலையில் இன்னின்ன தெருக்கள் இப்படியிருக்கவேண்டும் — இன்னின்ன வீடுகள் இடித்துத் தள்ளப்பட வேண்டும்—இன்னின்ன வீட்டுக்கு 3 அடுக்கு மாடிகட்ட வேண்டும் என்று நாம் தீர்மானித்தால், என்ன பொருள்? திருவண்ணாமலையிலுள்ளவர்களல்லவா அவ்வாறு தீர்மானிக்க வேண்டும்? ஆனால், நாம் தீர்மானித்து, திருவண்ணாமலைக்காரர்களைப் பார்த்து, 'நாங்கள் இந்த மாநாட்டில் கூடிப் பேசினோம்; வடக்கு வீதியை நீங்கள் தெற்குப் பக்கத்தில் திருப்புங்கள், தெற்கு வீதியிலே இருக்கின்ற குளத்தைத் தூர்த்துவிடுங்கள்; கிழக்குப் பக்கத்திலே இருக்கின்ற மாடிவீட்டுக் கட்டிடத்தை மண்குடிசையாக மாற்றுங்கள்; இன்னொரு பக்கத்திலிருக்கின்ற மண் குடிசையை மாடிவீடாகக் கட்டுங்கள்' என்று உத்தரவு போட்டால் என்ன பொருள்? நாம் இங்கே இருக்கத்தக்கவர்கள் அல்ல; 'சென்னையிலே கீழ்ப்பாக்கத்திலே இருக்கத்தக்கவர்கள்' என்று பொருள்!

"அதே முறையிலே, இந்தியாவுக்குச் சுதந்தரம் என்பதைப் பற்றிச் சட்டம் தீட்டப்போனவர்கள், 'இந்தியாவுக்கு இந்திதான் தேசிய மொழி' என்று, அந்த இடத்திலே தீர்மானிப்பானேன்?

"வீட்டுக்குள்ளே களவாட வந்த கள்ளன், படுத்துத் தூங்குகின்ற பெண்ணைப் பார்த்து, 'இந்தப் பெண்ணுக்கேற்ற புருஷன் அந்தத் தெருவிலே இருக்கிறான்; பார்த்து முடிப்போம்' என்று பேசுவான்? அவன் வந்தது திருட; திருடிக்கொண்டுப்போவானு; படுத்துத் தூங்குகிறப் பெண்ணைப் பார்த்து, 'இவளுடைய முகம் செந்தாமரையைப் போலிருக்கின்றது; இவளுக்கேற்ற மணவாளன் எங்கள் தெருவிலே இருக்கின்றான்; நான் பெண் பார்த்து வைக்கிறேன்' என்று சொல்லுவான்?

"அதைப்போல, உன்னிடத்திலே வெள்ளைக்காரன் கொடுத்த அந்த ஆட்சிப் பொறுப்பை ஒப்புக்கொண்டு, நீ, யார் யார் தலையைத்தடவலாம்; எங்கெந்த மக்களை மட்டந்தட்டலாம்; எந்தெந்த வியாபாரத்தை அமுத்திப் பிடிக்கலாம்; எவ்வளவு கோடிக் கணக்கிலே பணம் சேர்க்கலாம்' என்பதைக் கணக்கிடுவதற்குக் கூட்டப்பட்டது அரசியல் நிர்ணய சபை; அதிலேபோய், எங்களுடைய வீட்டுப் பெண்ணுக்குப் பிள்ளை பார்ப்பதுபோல, எங்களுடைய நாட்டுக்கு இந்தி மொழியைத் திணிப்பதென நீ தீர்மானம் போடுவானேன்?

"மைனர் சொத்தை, கார்டியனாக இருப்பவர் விற்றால், மைனர் மேஜரானதும் வழக்குத் தொடுக்கிறான். அதைப்போலத் தமிழர்கள்,1947-ல் மைனர் சொத்தைப் போல் — மைனர்களைப்போல — இருந்த நேரம் அது; அந்த நேரத்தில் அரசியல் நிர்ணய சபைக்கு யார் யார் போனார்கள்? மக்களிடத்தில் ஓட்டு வாங்கிக் கொண்டு யாரும் போகவில்லை. அரசியல் நிர்ணய சபைக்கு—காங்கிரஸ் ஆதிக்கமிருந்த காரணத்தினாலே-'கந்தா வா, முருகா வா, கடம்பா வா, கச்சி ஏகம்பா வா, நீங்கள் அத்தனைப் பேரும் வாருங்கள்; பேசத் தெரிந்தவர்கள் 2 பேர் வாருங்கள்; பேசத் தெரியாதவர்கள் 7 பேர் வாருங்கள்; எதிர்க்கக்கூடியவர்கள் ஒருவர் இருவர் போதும்; எதிர்க்கத் தெரியாதவர்கள் 20 பேர் வாருங்கள்; உங்களுக்கேற்ற கட்டணம் தரப்படும்' என்று அழைத்துச் செல்லப்பட்டு கூட்டப்பட்ட—ஒரு அவசரக்கோலத்தில் அள்ளித் தெளிக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையிலே, நீ ஒரு நாட்டினுடைய மானத்தை—ஒரு இனத்தினுடைய நல்வாழ்வை—ஒரு மொழியினுடைய வளத்தை—ஒரு மக்களுடைய விடுதலை உணர்ச்சியை — இவைகளையெல்லாம் பாதிக்கக்கூடிய மொழிப் பிரச்சினையிலே நீ எப்படித் தீர்ப்பளிக்கலாம்? அளித்தத் தீர்ப்புக்கும்—என்னுடைய நண்பர்கள் எனக்குக் காட்டுகிறார்கள்—ஒரே ஒரு ஓட்டுதான் மெஜாரிட்டி கிடைத்தது. இந்தியை தேசிய மொழியாக வைக்கலாமா, வேண்டாமா என்றால், 40 பேர் வேண்டும் என்றால், 39 பேர் வேண்டாம் என்றார்கள். 40-39; அது அல்ல கணக்கு!

"உதாரணத்துக்குச் சொல்லுகின்றேன்—ஒரே ஒரு மெஜாரிட்டியிலேதான், நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. இதுவா, நம்முடைய எண்ணங்களையும், நம்முடைய எதிர்காலத்தையும் பாதிக்கத்தக்க அளவுக்கு அதிகாரம் பெற்றதாக இருக்கவேண்டும்? அவசரக்கோலத்திலே அள்ளித் தெளிக்கப்பட்டதிலேயும் ஒரே ஒரு ஓட்டுதானே வித்தியாசம். அந்தநேரத்திலே, 'இந்தி மொழி திணிக்கப்படவேண்டும்; அதுதான் தேசியமொழி' என்று போட்டார்களே, அதற்குப்பிறகு மக்களைப் பார்த்துக் கேட்டார்களா—ஒரு வார்த்தை கேட்டார்களா—இந்திமொழி இருக்கலாமா என்று கேட்டார்களா என்றால், இல்லை.

"இப்பொழுது தமிழர்கள் மைனர் நிலையிலிருந்து நீங்கி மேஜரடைந்ததைப்போல், இன்றையத்தினம் ஓரளவுக்கு எழுச்சி பெற்றிருக்கிறார்கள்.

"இன்றையத் தினம் நான் சொல்லுவதை ஆணவம் என்று வடநாட்டுக்காரன் கருதிக்கொண்டாலும் அதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. எங்களுடைய உரிமை என்ன என்பது எங்களுக்குப் புரிந்துவிட்டது. அந்த உரிமையைப் பெறுவதற்கு எங்களுக்குப் போதுமான ஆற்றல் இல்லாவிட்டாலும் அந்த ஆற்றல் கிடைக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்குக் கிடைத்திருக்கிறது. ஆகவே, இந்தக் காலத்திலே நீ, பழைய காலத்தில் மிரட்டியதைப்போல், இந்தியைப் புகுத்திவிடலாம் என்று கருதினால் அது பகற்கனவாக முடியுமே தவிர நிசயமாக அது நடைபெறாது.

"டாக்டர் சுப்பராயன் அவர்கள் இந்தித் திணிப்புக்குழு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி, இந்தி பேசாத மக்களின் மனப்பான்மையை அறிந்துகொள்வதற்குத் துளியும் முயற்சிக்கவில்லை.

"வைதீகக் கல்யாணம்போல் அல்லவா அவர்கள் நடவடிக்கைகள் இருக்கின்றன? பெண்ணிடத்திலே ஒரு வார்த்தைகூடக் கேட்காமல், விடியற் காலையில் கணவனைக் கொண்டுவந்து உட்கார வைத்திருக்கும் நேரத்தில், அவன் ஒரு கால் நொண்டியாக இருந்து சாய்ந்து சாய்ந்து வந்தால், மணப்பெண் கண்கலங்கி, 'என்ன, ஒரு கால் இழுத்திருக்கும்போல் இருக்கிறதே' என்று தோழியிடத்திலே சொன்னால், 'இல்லை; வாழைப் பழத்தோலை மிதித்தார்' என்று பொய் பேசி, கழுத்திலே தாலி கட்டியதைப்போல, நாங்கள் தூங்கிக்கொண்டிருந்த நேரத்தில்—தமிழர்கள் ஏமாந்திருந்த நேரத்தில்—உலகமெல்லாம் உன்னைக் கவனித்துக்கொண்டிருந்த நேரத்தில்—சனநாயகம் வளராத நேரத்தில்—எங்கள் தம்பி சம்பத் பார்லிமெண்டில் இல்லாத நேரத்தில் — நாங்களெல்லாம் சட்டசபையிலே இல்லாத நேரத்தில் — தூங்குகின்ற நேரத்தில் உள்ளே நுழைந்த கள்வனைப் போல் நீ இந்தியைப் புகுத்தியிருக்கிறாய்; இப்பொழுது ஆண்மையிருந்தால் ஓட்டு எடு—இந்தி திணிக்கப்பட வேண்டுமென்று இந்தி பேசாத மக்கள் பகுதியிலே உனக்கு வக்கு இருந்தால்—வல்லமையிருந்தால் ஓட்டு எடு!

"காமராசருக்கு நல்ல வேளையாகப் பிள்ளை இல்லை. ஆகையால், அந்த வீட்டில் எனக்கு ஓட்டு கிடைக்காது. பக்தவத்சலம் வீட்டிலேயே எனக்கு ஓட்டு உண்டு; அவர் வீட்டுப் பிள்ளைகள் எனக்குத்தான் ஓட்டுப் போடுவார்களே தவிர, பக்தவத்சலத்துக்கு ஓட்டுப் போடமாட்டார்கள்; அந்த அளவுக்கு இந்தி வெறியைப் பற்றியும், இந்தி வெறியோடு தொடர்புகொண்ட வடநாட்டு ஆதிக்கவெறியைப் பற்றியும், தமிழ் நாட்டு மக்கள் மிகத் தெளிவாக இன்றையத் தினம் புரிந்துகொண்டிருக்கிறார்கள்.

"மிகத் தெளிவாகப் புரிந்துகொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே அவர்கள் இவ்வளவு துணிச்சலோடு வருகிறார்கள் என்றால்? தூங்குகின்ற நேரத்தில் நுழைகின்ற கள்ளன் தந்திரக்காரன் என்று பொருள்; விழித்துக் கொண்டிருக்கிற நேரத்திலே கள்ளன் வருகிறான் என்றால், அவனுடைய மடியிலே கூரான கத்தி இருக்கிறது என்று பொருள். அந்தக் கூரான கத்தி என்ன—தமிழர்களைப் பிளவுபடுத்துகின்ற கத்தி! அந்தக் கூரான கத்தி என்ன—150 பேர் அவர்கள் சட்டசபையில்; 15 பேர் எதிர்க்கட்சியினர் என்ற நிலைமை! அந்தக் கூரான கத்தி என்ன— மாட்டுப் பெட்டிக்கு நம்முடைய நாட்டு மக்கள், நிலைமைகள் இப்படியெல்லாம் வளருமென்பது பற்றி எண்ணிப் பார்க்காமல்—கருத்தறியாமல் போட்டுவிட்ட ஓட்டு! இவைகளெல்லாம் இன்றையத் தினம் கூரிய அந்த வாளைப்போல வடிவெடுத்து' தமிழர்களுடைய எதிர்காலத்தைத் துண்டிக்கவும், துளைக்கவும் வந்துகொண்டிருக்கின்றன.

இவைகளைத் தடுத்து நிறுத்துவதற்குத் திராவிட முன்னேற்றக் கழகம் தனது முழு ஆற்றலையும் இன்றையத்தினம் பயன்படுத்த விரும்புகின்றது. அதற்கு நாட்டு மக்களுடைய பேராதரவைக் கேட்டுக் கொள்வதற்கும், திரட்டித் தருவதற்கும் இந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டை இங்கு கூட்டியிருக்கிறார்கள். இதிலே நாம் நிறைவேற்ற இருக்கின்ற தீர்மானத்தை உங்களிடையே நான் படிக்கின்றேன்.

அண்ணா அவர்கள் தீர்மானத்தைப் படித்து விளக்கினார்— தீர்மான விவரம் முன்பே வெளியாகியுள்ளது—'எல்லா விதமான தியாகங்கள் புரியவும் தமிழர்கள் இன்று முதலே தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டுமென இந்த மாநாடு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது...' என்று தீர்மானத்தின் கடைசி வாசகத்தைப் படித்து முடித்ததும் கர ஒலிகள் கிளம்பின.

உடனே அண்ணா அவர்கள் தொடர்ந்து பேசியதாவது :—

"நான் உங்களைத் 'தயார்' என்று கூறச் சொல்லவில்லை. தயாராயிருப்பவர்கள் யார் என்பதை என்னால் உண்மையிலேயே பார்த்துக்கொள்ள முடியும். நான் மக்கள் முகத்தை 20 ஆண்டுக் காலமாகப் பார்த்துக்கொண்டு வருகின்றேன். 'பாவலா' வீரமும் எனக்குத் தெரியும்—கொட்டகை உள்வரையிலே இருக்கின்ற வீரமும் எனக்குத் தெரியும்-வெட்ட வெளியிலும் தங்கக் கூடிய வீரமும் எனக்குத் தெரியும்.

"ஆகையினால் நான், என்னுடைய மனதுக்குள்ளாகவே கணக்கெடுத்துக் கொள்கின்றேன். அந்தக் கணக்கு என்னைச் சோர்வடையச் செய்யவில்லை; உண்மையிலேயே மகிழ்ச்சியடைச் செய்கின்றது. தமிழ் நாட்டு மக்கள் தயாராகத்தான் இருக்கின்றார்கள் என்று தெரிவிக்கும் அறிகுறியாக நீங்கள் இந்தத் தீர்மானத்தைக் கரகோஷத்தின்மூலம் நிறைவேற்றவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

(கைதட்டல்)

"இதோ, இன்னொரு தீர்மானம் படிக்கிறேன் : (தீர்மானம் படித்தவுடன்) பேசியதாவது :—

"இன்றையத்தினம் காங்கிரஸ்காரர்கள் மெத்த சாதுக்களைப் போல நம்மிடத்திலே பேசும் பொழுது சொல்லுகிறார்கள்—'இந்தியை நாங்களா புகுத்துகிறோம்? அரசியல் சட்டத்திலேயே அது இருக்கிறது; அரசியல் சட்டத்தை நாங்கள் நிறைவேற்ற வேண்டுமே; அதற்காகத்தான் செய்கின்றோம்'—என்கிறார்கள்.

"அரசியல் சட்டத்தை எழுதிய நேரத்தில் நாம் கலந்து ஆலோசிக்கப்படவில்லை என்பதை இந்தத் தீர்மானம் வலியுறுத்துகின்றது. நாம் கலந்து ஆலோசிக்கப்படவில்லை என்பது மாத்திரமல்ல—அதிலே பேசுவதற்குச் சென்றவர்கள், மக்களிடத்திலே ஓட்டு வாங்கிக்கொண்டு சென்றவர்கள் அல்ல; அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் சென்றார் — எந்தத் தொகுதியில் வெற்றி பெற்றுச் சென்றார்? அவர், அவருடைய அறிவு, அவருடைய செல்வாக்கு இவைகள் கலந்த தொகுதியே தவிர, நீங்களும் நானும் இருக்கின்ற தொகுதியல்ல.

"இப்படி, அவரவர் தாட்சண்யப்பட்டவர்கள்—அறிவினாலே தாட்சண்யப்பட்டவர்கள் — செல்வாக்கினாலே தாட்சண்யப்பட்டவர்கள்—நெடுங்காலமாகக் காங்கிரசுக்குப் பணம் கொடுத்ததனாலே தாட்சண்யப்பட்டவர்கள் — இப்படிப்பட்டவர்கள் நிறைவேற்றிய ஒரு தீர்மானம் எங்களைக் கட்டுப்படுத்தாது என்பது இந்தத் தீர்மானத்தினுடைய வாசகம்.

"திரௌபதை துகில் கட்டுவதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க வேண்டியவன் துச்சாதனன் என்றால், திரௌபதைக்கு என்றையத்தினம் துணி கிடைக்கும்? அதைப்போல, தமிழனுக்கு இந்தி வேண்டுமா வேண்டாமா என்பதை வடநாட்டுக்காரன் தீர்மானிப்பதென்றால் நம்முடைய தமிழ்மொழி எப்படித் தப்பும்? திரௌபதிக்கு எந்தத் துகில் தேவை என்பதை தருமன் சொன்னால் ஏதோ கொஞ்சம் நாட்டுச் சேலையையாவது வாங்கித் தந்திருப்பான்; அர்ச்சுனன் சொன்னால் கொஞ்சம் அலங்கார சேலை வாங்கிக் கொடுத்திருப்பான். துரியோதனனோ, துச்சாதனனோ சொன்னால் எந்தச் சேலை கிடைத்திருக்கும்? இருக்கிற சேலையையும், உருவினவர்களல்லவா அவர்கள்?

"அது போன்று, இருக்கின்ற அரசியலைப் பறித்துக்கொள்ளும் வடநாட்டுக்காரன், 'உங்களுக்கு எந்த மொழி தேவை?' என்று கேட்பது, துச்சாதனனைப் பார்த்து, 'திரௌபதைக்கு எந்தச் சேலை வாங்கலாம்?' என்று கேட்கின்ற அத்தகைய வெட்கங்கெட்ட கதையைப் போன்றதுதான்! ஆகவேதான், அப்படிப்பட்ட விதி ரத்து செய்யப்பட வேண்டும் என்ற இந்தத் தீர்மானத்தை நான் உங்களிடத்திலே எடுத்துச்சொன்னேன்.

(4-ம் பக்கம் பார்க்க)

அண்ணு எச்சரிக்கை

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மற்ருென்று :—இந்தி மொழியைப் பற்றி மட்டும் சொல்லுகின்ற நேரத்தில் தாய்மொழிக்கு நம்முடைய மதிப்பு என்ன? தாய்மொழிக்கு நாம் தருகின்ற மரியாதை என்ன என்பதை நாம் தெரிவிக்கின்றவகையில் (இன்ஞெரு தீர்மானம் படிக்கப் பட்டது.)

"ஆங்கிலத்தைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில் சில தேசியத் தோழர்கள்——தங்களுடைய தேசியம் முற்றி விட்ட காரணத்தினுலே என்று நான் கருதுகின்றேன்—சொல்லுகின்ருர்கள்—'ஆங்கிலம் அன்னிய மொழி; ஆகவே, ஆங்கிலம் ஆகாது' என்று!

"அன்னியருடைய வழிகளெல்லாம் நமக்குத் தேவையில்லையென்ருல், இரயில் அன்னியன் கொடுத்ததுதான்; கார்டு-கவர்களை அன்னியன் காலத்திலே தான் பார்த்தோம்; தபால்-தந்தி அன்னியன் காலத்தில்தான் கிடைத்தது; ஆப்பரேஷன், இஞ்செக்ஷன் அன்னியன் காலத்தில் வந்தவைதான். இவைகளெல்லாம் இருக்கலாம்—ஆனல், அவர்களுடைய மொழிமட்டும் இருக்கக் கூடாது என்று எடுத்துச் சொல்லுவது எந்த வாதம் என்பது எனக்குப் புரியவில்லை.

"ஆகையினுலேதான், ஆங்கிலத்தை அன்னியமொழி என்று கருதாமல், அன்னியரோடு தொடர்புபடுத்துகின்ற மொழி—அன்னியர்கள் என்ருல் உலகத்திலிருக்கின்ற அத்தனை அன்னியர்களோடும் தொடர்புபடுத்துவதற்கு ஆங்கிலம் ஒன்று இருந்தால் போதும் என்ற காரணத்தினுலே, ஆங்கிலத்தைத் தொடர்பு மொழியாகவும், தாய்மொழியை நம்முடைய ஆட்சி மொழியாகவும், அலுவல் மொழியாகவும், அற மன்றத்திலே இருக்கத்தக்க மொழியாகவும் ஏற்றுக்கொள்ளவேண்டும்; சர்க்கார் ஏற்றுக் கொண்டிருக்கின்றதென்ருலும், அதை வெற்றிகரமாக்க வேண்டுமென்ற தீர்மானம் இங்கே எழுதப்பட்டிருக்கிறது.

"நாமெல்லாம் ஒரு ஜனநாயக அம்சத்துக்குக் கட்டுப்பட்டவர்கள்; நானே, அருணகிரி அடிகள் அவர்களோ, அல்லது மற்றவர்களோ, இங்கே எவ்வளவுதான் எடுத்துச் சொன்ஞலும், நம்முடைய தி. மு. கழகம் எப்படியெப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதை எடுத்துச் சொல்ல அருகதை பெற்றவரும், அதிகாரம் பெற்றவரும் நம்முடைய நாவலர்-பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள்தான் என்ற காரணத்திஞல், அவருக்கு ஒரு வேண்டுகோளையும் ஒரு தீர்மான ரூபத்தில் இதில் போடப்பட்டுள்ளது (தீர்மானம்படிக்கப்பட்டது.)

"நான் உங்களிடத்திலே பிரச்சினையை விளக்கிவிட்டேன்; நாட்டு நிலைமையை எடுத்துச் சொல்லிவிட்டேன்; போராட்டத்தின் அவசியத்தையும் சொல்லிவிட்டேன்; அந்தப் போராட்டத்துக்குத் தக்க திட்டத்தைத் தீட்டித் தரக்கூடியவரை நீங்கள் இங்கே பார்க்கின்றீர்கள். அந்த நெடிய உருவம்—தமிழ்ப் பண்பினுடைய உறைவிடம்—தக்க திட்டத்தை நமக்குத் தீட்டித்தரும் என்ற நம்பிக்கையோடு உங்களிடமிருந்து விடைபெற்றுக்கொள்கிறேன்; வணக்கம்."

மாவூர் சர்மா காலமானுர்

திருவாரூர், செப். 28—

திருவாரூருக்கு அடுத்த மாவூரில் தமது இல்லத்தில் சர். ஆர். எஸ். சர்மா திடீரென இரத்த அழுத்தத்தின் காரணமாக காலமாகி விட்டார்.

அவர் கல்கத்தாவிலிருந்து வெளிவரும் 'விப்' என்ற ஆங்கில ஏட்டின் ஆசிரியர். மேல்நாடுகள் சுற்றி நல்ல அரசியல் பண்பு பெற்றவர். திராவிட இயக்கத்துடன் ஆரம்ப காலத்தில் பற்றும், பாசமும் கொண்டிருந்தவராவர்.

தென் மண்டல மாநிலங்களுக்குப் பொதுவான போலீஸ் படை!

ஐதராபாத், செப். 29—

தென் மண்டல மாநிலங்களுக்குப் பொதுவானதோர் போலீஸ் படை இருக்கலாம் என, சென்னைப் பிரதிநிதிகள், மண்டலக் குழுவில் தெரிவித்தனராம்.

இந்த யோசனையை, 'அரியது' எனப் பாராட்டியிருக்கிருர், குழுவிற்குத் தலைமை வகித்த மத்திய மந்திரி பண்டித பந்த்.

'இப்போது ஒவ்வொரு மாநிலமும் ரிசர்வ் போலீஸ் படை வைத்திருக்கிறது; இதில் பாதிதான் வேலை செய்கின்றது; எஞ்சியவை, அவசர நிலைகளைச் சமாளிப்பதற்கென வைக்கப்பட்டிருப்பதாகும். எனவே, தென் மண்டலத்திற்கென ஒரு பொதுவான போலீஸ் படை இருந்தால், அது, நான்கு மாநிலங்களும் தனித் தனியாகப் படை வைத்திருக்கும்செலவைக் குறைக்கப் பயன்படும்' என்றும் பண்டித பந்த் கூறியிருக்கிருர்.

கோதாவரி, கிருஷ்ணு நதிகளின்

உபரித் தண்ணீர்

தமிழ்நாடு பயன்படுத்திக் கொள்ளும் திட்டம்

ஐதராபாத், செப். 29—

கிருஷ்ணு, கோதாவரி நதிகளின் உபரித் தண்ணீரை, தமிழ்நாடு பயன்படுத்திக்கொள்வதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து அறிக்கை ஒன்று தர, ஆந்திர மாநில பிரதம நீர்ப்பாசன எஞ்சினியரான எல். வெங்கட கிருஷ்ண அய்யர் கேட்கப்பட்டிருக்கிருர் என்று மண்டலக் குழுவில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

குழுவின் முதல் கூட்டத்திலேயே இதுபற்றி பேசசு நடந்தது. இரண்டாம் கூட்ட நிகழ்ச்சி நிரலிலும் இந்த விஷயம் சேர்க்கப்பட வேண்டுமென தமிழ்நாட்டு சர்க்கார் வற்புறுத்தியது. அதன் பேரில், இது குறித்துப் பேசிய ஆந்திர முதன் மந்திரி மேற்கண்ட தகவலை வெளியிட்டிருக்கிருர்.

முன்னர் பேசிய பண்டித பந்த், இப்போதுள்ள பொருளாதார நிலையில், எந்தப் பெரிய திட்டத்தையும் இங்கு மேற்கொள்ளுவதற்கு இயலாது என்றும், என்ருலும், கோதாவரி, கிருஷ்ணு நதிகளின் உபரித் தண்ணீர் உபயோகம்பற்றி ஒரு முடிவான கருத்துக்கு வர பல விவரங்களையும் ஆராயவேண்டும் என்றும் குறிப்பிட்டாராம்.

நுட்பமாக ஆராய வேண்டுமாம்!

'கேரள நதிகளின் தண்ணீரை சென்னை மாநிலத்திற்குப் பயன்படுத்தும் பிரச்சினையை நுட்பமாக ஆராய்வது அவசியமாகும்' என்று கேரள முதலமைச்சர் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

'தென் மண்டலக் குழு அமைத்துவிட்டதால் மட்டும் உணவு பிரச்சினை தீர்ந்துவிடாது' என்றும், மற்ருெரு கேள்விக்கு அவர் பதிலளித்துள்ளார்.

தாமோதர் திட்டத்தின் மற்ருெரு கட்டம் பூர்த்தி

மூன்ருவது அணையைத் திறந்து வைக்கிருர் பண்டிதர்

மைத்தான், செப். 27—

தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்தின்கீழ் இங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள மூன்ருவது அணைக்கட்டினை பண்டித நேரு திறந்து வைத்திருக்கிருர்.

தாமோதர் திட்டத்தின் நோக்கங்கள் மூன்று என்றும், வெள்ளக் கட்டுப்பாடு, நீர்ப்பாசனம், மின்சார உற்பத்தி என்ற மூன்று நோக்கங்களுடன்தான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுவருகிறது என்றும், நாட்டில் மின்சாரத் தேவை அதிகரித்துவருகிறது என்றும், பெருந் தொழில்களுக்கு மட்டுமின்றி சிறு கிராமத் தொழில்களுக்கும் மின் சாரம் தரப்படவேண்டும் என்றும், பண்டிதர், பேசுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

தீவிரமான விவசாயத்தின் மூலம் நாட்டின் உற்பத்திச் சக்தியை அதிகரிக்கவேண்டும் என்றும், சீனவில் விளைநிலங்களின் அளவு இந்தியாவைவிடக் குறைவாக இருந்தும் இந்தியாவைப் போல நான்கு அல்லது ஐந்து மடங்கு உணவு உற்பத்தி தீவிரச் சாகுபடி மூலம் நடைபெறுகிறது என்றும் பண்டிதர் கூறியிருக்கிருர்.

கழகத் தோழர்களின் சீரிய பணி

தீ விபத்தில் சிக்கியவர்களைக் காப்பாற்றினர்

புதுக்கோட்டை, செப். 26—

ஆத்துக்குடிக்கு 8-வது மைலிலுள்ள புதுக்கோட்டையில் 23—9—57 மாலை 5 மணியளவில் 44 வீடுகள் தீப்பற்றிவிட்டன.

சிறுவர்கள் பனங்காய் சுட்டுக் கொண்டிருக்கையில் (தாழ்ந்த தாழ்வாரக் கூரை இருந்ததால்) தீப்பிடிப்பதற்கு ஏதுவாகிவிட்டது. கழகத் தோழர்கள் முக்கியமாய்ப் பங்கெடுத்துத் தீயை அணைத்து ஆவன செய்தார்கள். கம்புகள்மேல் விழுந்தும் தீப்பொறிகள் விழுந்தும்காயங்கள் ஏற்பட்டபோதிலும் கூடத் துணிந்து தீயைத் தொடர்ந்து அணைத்தனர்.

24—9—57 அன்று அரிசி உண்டியல் எடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடு வீடாகச் சென்று கழகத் தோழர்கள் வழங்கினர்.

முத்துராமலிங்கத் தேவர் கைதானுர்

சென்னை, செப். 30—

'பார்வர்டு பிளாக்' தலைவர் உ. முத்துராமலிங்கத் தேவர் எம். பி., மதுரையில் காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டியின் மாநாட்டினைத் துவக்கிவைத்துபேசிவிட்டுத் திரும்புகையில் சனிக்கிழமை இரவு 10 மணியளவில் கைது செய்யப்பட்டிருக்கிருர்.

அதனைத் தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமையன்று அவரது சகாவான சசிவர்ணத் தேவர் எம். எல். ஏ.-யின் வீடும் போலீசாரால் சோதனையிடப்பட்டிருக்கிறது.

முத்துராமலிங்கத்தேவர் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து, கா. சீ. க. மாநாடு தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருக்கிறது.

மதுரை கழகத் தோழர்கள் மீது வழக்கு

மூன்று பேர் விசாரிக்கப்பட்டனர்

மதுரை, செப். 30—

மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்கள் உட்பட 11 கழகத் தோழர்கள் மீது தொடரப்பட்டுள்ள ஜாமீன் வழக்கு 21-9-57 அன்று, மேலூரில், ரெவினியூ டிவிஷனல் அதிகாரி அவர்களால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மூன்று பேர் விசாரிக்கப்பட்டனர்.

மீண்டும் அக்டோபர் திங்கள் 5-ந் தேதிக்கு வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது; மேலூரில் விசாரணை நடைபெறும்.

நம் கழகத் தோழர்களுக்காக வழக்கறிஞர்கள் தர்மராஜ், சந்தோஷம், தாவூத், போதகுரு சாமி ஆகியோர் வாதாடினர்.

கழகக் கூட்டங்கள்

★

பீளமேடு :
பெருமாள் கோவில் திடலில்
2—10—57 மாலை 6 மணிக்கு
பேசுபவர் :
க. அன்பழகன் எம்.எல்.ஏ.

★

பூதலூர் :
(தஞ்சை மாவட்டம்)
2—10—57 மாலை 5 மணிக்கு
தலைவர் : பி. எஸ். தங்கமுத்து
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
என். எஸ். இளங்கோ
முத்தண்ணன்
ஆர். நாகராசன்

★

பொருளூர் :
போதுச்சாவடி மைதானத்தில்
2—10—57 இரவு 7 மணிக்கு
தலைவர் : ப. பழனிச்சாமி
பேசுவோர் :
சிதம்பரனுர்
தாரைத்தம்பி
க. பெரியசாமி
டி. அங்கமுத்து
இரா. வடிவேலு
இசை : திருமூர்த்தி

★

பெங்களூர் :
சுபாஷ் நகர் திடலில்
3—10—57 மாலை 5½மணிக்கு
தலைவர் : ஜே. கனகசுந்தரம்
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத் எம்.பி.
எஸ். வி. பதி
(ஆங்கிலம்)
குமார வெங்கண்ணு
(கன்னடம்)

வருமானத்தின் மதிப்பு குறைந்துவிட்டது

அஞ்சல் சங்க முறையீடு

புதுடில்லி, செப். 28—

மத்திய அரசாங்க ஊழியர்களின் ஊதியத்தை நியாய ரீதியில் உயர்த்தி நிர்ணயிக்க மத்திய அரசாங்கம் நியமித்துள்ள 'ஊழியக் குழு'விடம், அஞ்சல் ஊழியர் சங்கம் மனு ஒன்று தந்துள்ளது.

உடனே இடைக்கால நிவாரணம் அளிக்கப்பட வேண்டும் என்றும், இது குறித்து இன்னும் ஒரு மாதத்திற்குள் முடிவு செய்வது நலம் என்றும், 1949—லும், 1951-லும் அளிக்கப்பட்ட கிராக்கிப்படி உயர்வு வாழ்க்கைச் செலவுக்கு ஏற்றதல்ல என்றும், விலைவாசிகள் உயர்ந்துகொண்டே வருகிறது என்றும், தற்போது ரூ. 150 ஊதியத்தின் மதிப்பு 39—8—0 ஆகவும், ரூ. 78 ஊதியத்தின் மதிப்பு ரு. 21 ஆகவும் குறைந்துள்ளது என்றும் அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'பணம் கிடைப்பது சுலபமல்ல'

காமன்வெல்த் நாடுகளின் நிதி மந்திரிகள் மாநாட்டில் கலந்துகொள்ள மான்ட்ட்ரெம்ப்ளண்ட் வந்து சேர்ந்த இந்தியாவின் நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியை, நிருபர்கள், 'தங்களால் வாஷிங்டனில் கடன்பெற முடிந்ததா?' என்று கேட்டனராம்.

'பதிலளித்த அவர், 'பணம் கிடைப்பது என்பது அவ்வளவு சுலபமானது அல்ல' என்று கூறினாராம்!

தூத்துக்குடியில் ஆர்வி ஆலை மூடப்பட்டது

மதுரை, செப். 30—

ஆர்வி நூற்பு ஆலைகளின் தூத்துக்குடி கிளை நேற்று முதல் அடுத்த அறிவிப்பு வரை மூடப்பட்டுள்ளது என்று தெரியவருகிறது.

இதனல், 3,000 பேருக்கு வேலையில்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

மு. கருணுநிதி

சுற்றுப்பயணம்

அக்.
1 : சென்னை--டிரான்ஸ்போர்ட் தொழிலாளர் கூட்டம்
11 : உப்பிடமங்கலம் (வெள்ளியணைப் பகுதி)
13 : திருச்சி : காலை—பீடித் தொழிலாளர் மாநாடு
மாலை—இந்தி எதிர்ப்புப் பொதுக்கூட்டம்
15 : மாதவரம்—சென்னை
19 : காலை — இராமநாதபுரம் — சிறப்புக் கூட்டம்
மாலை—இளையாங்குடி— பொதுக்கூட்டம்
20 : வேதாரண்யம் :
காலை—தஞ்சை மாவட்ட பொதுக்குழுக் கூட்டம்
27 : சேலம்
19 : சென்னை--இராயப்பேட்டை

சென்னை — தீவிர பஸ் போக்குவரத்துத் தொழிலாளர் சங்கப் பொதுக்கூட்டம்

1—10—57 மாலை 6-மணிக்கு, சென்னை -- இராயப்பேட்டை, பழைய காங்கிரஸ் மைதானத்தில் தோழர் கி. மனேகரன் தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெறும். தோழர்கள் மு. கருணுநிதி எம்.எல்.ஏ., காஞ்சி-கல்யாண சுந்தரம், டாக்டர் சி ஆர் கிருஷ்ணா பிள்ளை, பி. எஸ். வரதாச்சாரி மற்றும் பலர் பேசுவர்.

கே. வி. கே. சாமி நினைவு நாள்

1—10—57 இரவு 7-மணிக்கு சென்னை-1-வதுவட்டம் தி. மு. க. சார்பில், கழக அலுவலகத்தில் (217, திருவொற்றியூர் நெடுஞ் சாலை) தோழர் மு. இராமசாமி தலைமையில் கே. வி. கே. சாமி நினைவு நாள் கூட்டம் நடைபெறும்; தோழர்கள் மு. மா. முத்து, பொ. சம்பந்தன், பட்டாபி ஆகியோர் பேசுவர்.

வள்ளுவர் படிப்பகச் சிறப்புக் கூட்டம்

1—10—57 இரவு 7-மணிக்கு, வேலூர் (சேலம்) சுல்தான் பேட்டை வள்ளுவர் திடலில் தோழர் ப. மாரியப்பன் தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெறும்; தோழர் க. அன்பழகன் எம்.எல்.ஏ. சரூர் தமிழ்மொழி மற்றும் பலர் பேசுவர்.

'நம் நாடு'

விற்பனையாளர்கள்

★

நெய்வேலியில் :
திரு. எஸ். தூசை லாசர்
தேநீர் விடுதி, குவேரி ரோடு
நெய்வேலி
(தென்னுற்காடு மாவட்டம்)

★

தாரமங்கலத்தில் :
திரு. பி. கே. முத்துசாமி
தாரமங்கலம் அஞ்சல்
ஓமலூர் வட்டம்
(சேலம் மாவட்டம்)

★

இலுப்பூரில் :
செயலாளர்
தி. மு. கழகம்
இலுப்பூர் அஞ்சல்
(திருச்சி மாவட்டம்)

★

சூரமங்கலத்தில் :
திரு. எம். பொன்னையா
சூரமங்கலம்
(சேலம் சந்திப்பு)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.